2017 ஜூன் 16]

கோட்டைக்கு கூடுதல் நிதியொதுக்கீடு செய்து சுற்றுலாத் தலமாக வகை மாற்றம் செய்திட வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை, தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத்தலம் என அறிவிப்பதில்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப, தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ள அனைத்து கோரிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

பேருந்து வசதி

***5783—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆண்டாவூரணி, அதவத்தூர், செங்காணம், அடம்பூர் வரை புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2017 ஜூன் 16

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, திருவாடனையிலிருந்து ஆண்டாவூரணி வழியாக அதவத்தூருக்கு காலை 5–45 மணிக்கு ஒரு பேருந்தும், தேவக்கோட்டையிலிருந்து ஆண்டாவூரணி வழியாக அதவத்தூருக்கு மாலை 3–50 மணிக்கு ஒரு பேருந்தும் இயக்கப்படுகின்றன. மேலும், தேவக்கோட்டையிலிருந்து அதவத்தூர், செங்காணம், அடம்பூர் வழியாக திருப்புவனவாசலுக்கு பேருந்துகள்மூலம் மூன்று நடைகள் சென்று வருகின்றன. இக்கிராமங்களுக்கு பயணிகளின் அடர்வுக்கேற்ப பகுதி பகுதியாக அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்படி பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டாவூரணி என்பது இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இடம். அதவத்தூர், செங்காணம், அடம்பூர் என்பது புதுக்கோட்டை ஜில்லாவைச் சேர்ந்த இடங்களாகும். இந்த ஊர்களை இணைப்பதற்கு இந்தப் பேருந்து அவசியமாகத் தேவை என்பதை நான் முழுமையாக அறிவேன். இந்தப் பேருந்தை நம்முடைய அரசு உடனடியாக இயக்குவதற்கு உரிய ஆணையைப் பிறப்பிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வழித் தடங்களில் கிட்டத்திட்ட 5 நடைகள் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பேருந்துகளில் பயணம் செய்யக்கூடிய பயணிகளின் அடர்வு சராசரியாக 45 சதவிகிதம்தான் இருக்கின்றது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனை செய்து, அந்தப் பகுதிகளில் பேருந்துகள் தேவைப்படுமாயின், அவற்றை

2017 ஜூன் 16]

விடுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து நத்தம் வழியாக அரசு விரைவுப் பேருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால், நத்தத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன். மேலும், நத்தத்திலிருந்து திருச்சிக்கு ஒரு பேருந்தும், நத்தத்திலிருந்து ஊமச்சிக்குளம், கடச்சனேந்தல் வழியாக மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு நகரப் பேருந்து ஒன்றும் இயக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வழித்தடங்களில் இயங்கக்கூடிய பேருந்துகளை ஆய்வு செய்து, அங்கே இருக்கக்கூடிய பயணிகளின் அடர்வுக்கேற்ப தேவை ஏற்படுமாயின், அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]